நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்
திரு. சு. சங்கரமூர்த்தி. பி.இ.,
நகர் ஊரமைப்பு இணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
காஜாமலை மெயின் ரோடு, காஜாமலை,
திருச்சிராப்பள்ளி – 620 023.
E Mail ID : tryjddtcp@gmail.com

பெறுநர்
திரு.முரளிதரன்,
த/பெ.இராமானுஜம்,
எண்.20, பாண்டியன் சாலை,
புரட்டாசி வீதி, செல்வநகர் விஸ்தரிப்பு,
கருமண்டபம்,
திருச்சி – 620 001.

ந.க.எண்.3698/2021/ தியா3 நாள். .12.2021

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – திருச்சிராப்பள்ளி மாவட்டம் – ஸ்ரீரங்கம் வட்டம் – மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம் – புங்கனூர் ஊராட்சி – தாயனூர் கிராமம் – சர்வே எண். 58/8D1B–ல் கட்டுப்பட்ட 2.63 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்திற்கு மனைப்பிரிவு வரைபடத்திற்கு – சாலை அமைப்பு வரைபட ஒப்புதல் வழங்கப்படுவது – தொடர்பாக.

பார்வை:
1 மனுதாரர் திரு.முரளிதரன் அவர்களின் விண்ணப்பம், நாள்.17.09.2021 மற்றும் 02.12.2021
2 அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019.
3 அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.09.12.2020.
4 நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.19799/2020 போ, நாள்.24.12.2020

- - - -

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம், புங்கனூர் ஊராட்சி, தாயனூர் கிராமம், சர்வே எண். 58/8D1B–ல் கட்டுப்பட்ட 2.63 ஏக்கர் பரப்பளவில் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் கோரி பார்வை 1–ல் கண்டுள்ள கடிதத்துடன் பெறப்பட்ட விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் விபரங்கள் தெரிவிக்கப்படுகிறது.

மனைப்பிரிவிற்கான சாலை மற்றும் பொது ஒதுக்கீடு அமைப்புகளை காட்டும் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபடம் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

பார்வை 2 மற்றும் 3–ல் கண்டுள்ள அரசாணைகளின்படியும் பார்வை 4–ல் கண்டுள்ள சுற்றறிக்கையின்டியும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் குறிப்பிடப்பட்டவாறு சாலை அமைப்பு வரைபடத்தின்படி சாலைகள், மூலை முடக்குகள், உள்ளாட்சிக்கான பொது உபயோக இடம், தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டிய இடம் ஆகியவற்றினை உள்ளாட்சிக்கு தானமாக வழங்கும் போது தானபத்திரத்தின் ஒவ்வொரு சாலைக்கும் எண்ணிட்டு சாலையின் நீளம் மற்றும் அகலம் அளவுகள் மற்றும் பரப்பளவு குறிப்பிட்டும், நான்கு பக்க எல்லைகள் குறிப்பிடப்பட்டும், ஒப்புதல் அளிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபட நகலை இணைத்து பத்திரப்பதிவு அலுவலகத்தில் தலைவர், புங்கனூர் ஊராட்சி அவர்கள் பெயரில் தானபத்திரம் மூலம் பதிவு செய்தல் வேண்டும்.

மேற்கண்டவாறு தானபத்திரம் பதிவு செய்யப்பட்டதை உறுதி செய்து தானபத்திர அசல் ஆவணம் மற்றும் அத்தாட்சியிட்ட நகல், வில்லங்கச் சான்று ஆகியவற்றினை மனுதாரர் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

நாகீ
23/12/2021

இணைப்பு:
சாலை அமைப்பு
வரைபட நகல் – 1

நகல்
தலைவர்,
புங்கனூர் ஊராட்சி மன்றம்,
மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம்,
ஸ்ரீரங்கம் வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.